**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, சங்ககிரி**
**சேலம் மாவட்டம்.**

**முன்னிலை – திரு. D. சிவக்குமார், B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,**

2026 –ஆம் ஆண்டு ஜூலை மாதம் –15 ஆம் நாள் புதன்கிழமை

ஸ்ரீபராபவ ஆண்டு ஆனி மாதம் 31–ம் நாள் புதன்கிழமை

**சுருக்குமுறை விசாரணை வழக்கு எண் – 571/2026**

**CNR No. TNSA09-001006-2026**

தமிழ்நாடு அரசுக்காக,
(State of Tamil Nadu, Rep. by,)
காவல் உதவி ஆய்வாளர்,
மகுடஞ்சாவடி காவல் நிலையம்,
குற்ற எண். 152/2026. .... குற்றமுறையீட்டாளர்

**/எதிர்/**

திரு. சுரேஷ் (32/2026),
த/பெ. சேகர்,
5/133, நொறுக்கம்பாளையம்,
காளிகவுண்டம்பாளையம்,
சங்ககிரி தாலுக்கா,
சேலம் மாவட்டம். .... எதிரி

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:40:28 +0530

| S.No | Name of the P.S and Cr.No of the Offence | Description of the Accused | | | | | Date of | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Name | Father's name | Occupation | Residence | Age | Occurrence | Complaint | Apprehension | Release on bail | Commitment | Commencement of Trial | closure of Trial | Service of Copy Judgment or finding on accused | Sentence or order | Explanation of Delay |
| **1** | **2** | **3** | **4** | **5** | **6** | **7** | **8** | **9** | **10** | **11** | **12** | **13** | **14** | **15** | **16** | **17** |
| 1 | Magudamchavadi PS. Cr.No. 152/2026. | Suresh | Sekar | Weaver | 5/133, Norukkampalayam, Kaligoundampalayam, Sankari Tk, Salem Dt. | (32/2026) | 18.05.2026 | 18.05.2026 | 18.05.2026 | 18.05.2026 (Station Bail) | N.A | 07.07.2026 | 15.07.2026 | 15.07.2026 | 15.07.26- Conviction | N.A |

| | | |
|---|---|---|
| **I.** | Period of Remand of Accused | Nil (Station bail) |
| **II.** | Date of filing of Final Report in Court | 15.06.2026 |
| **III.** | Date of questioning of accused under section 230 B.N.S.S. | 22.06.2026 |
| **IV.** | Filing of Miscellaneous petitions and their result | Nil |
| **V.** | Date of examination in chief and cross-examination of witnesses | **Witness** / **Chief** / **Cross**<br>PW1 / 07.07.2026 / 07.07.2026<br>PW2 / 07.07.2026 / 07.07.2026 |
| **VI.** | Date of examination of accused under section 351(1)(b) of B.N.S.S. | 15.07.2026 |
| **VII** | Details of abscondence of accused and his appearance / production | Nil |

**STC.No. 571/2026**

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:40:33 +0530

| | | |
|---|---|---|
| **VIII** | Grant of stay by superior Court and the result thereof | Nil |
| **IX.** | Final Order | Accused is found guilty and convicted under Section 278(2) B.N.S.S. for the offence under Section 4-A Tamil Nadu Prohibition Act and imposed to pay a fine of Rs. 700/-(Rupees Seven Hundred Only) and on default to suffer one month simple imprisonment. |

**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI**
**JUDGMENT IN STC. NO. 571 OF 2026 ON THE FILE OF THE JUDICIAL MAGISTRATE NO.II, SANKARI.**
**PRESENT: Thiru. D. Sivakumar, B.Sc., M.I.B., L.L.B., P.G.D.C.A.,**
**Judicial Magistrate No.II, Sankari**
**(Wednesday, Dated: 15th day of July 2026)**

| | |
|---|---|
| Complainant | Sub Inspector of Police, Magudanchavadi P.S. |
| Accused | Mr. Suresh (32/2026), S/o.Sekar |
| Offence | Under Section 4-A Tamil Nadu Prohibition Act. |
| Finding | Accused is found guilty and convicted under Section 278(2) B.N.S.S. for the offence under Section 4-A Tamil Nadu Prohibition Act. |
| Sentence | Accused is found guilty and convicted under Section 278(2) B.N.S.S. for the offence under Section 4-A Tamil Nadu Prohibition Act and imposed to pay a fine of Rs. 700/-(Rupees Seven Hundred Only) and on default to suffer one month simple imprisonment. |

இவ்வழக்கானது கடந்த 15.06.2026–ஆம் தேதி இந்நீதிமன்றத்தில் S.T.C.No.571/2026–ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இறுதியாக 15.07.2026–ஆம் தேதி விசாரணைக்கு வந்த போது அரசுத்தரப்பில் கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.C.கோபதி,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும் வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இந்த வழக்கில் இன்று வழங்குகின்ற



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:40:39 +0530

**<u>தீர்ப்புரை</u>**

**1.** கடந்த 18.05.2026–ந் தேதி 15.30 மணிக்கு மகுடஞ்சாவடி காவல் நிலைய சரகம், கனககிரி கிராமம், பிரண்ட்ஸ் தாபா அருகே எதிரி சுரேஷ் என்பவர் பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறாக மது அருந்தி கொண்டிருந்ததாக கூறி எதிரி மீது சட்டப்பிரிவு 4–A Tamil Nadu Prohibition Act–ன் கீழ் குற்றம் புரிந்ததாக மகுடஞ்சாவடி காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் இந்நீதிமன்றத்தில் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** மேற்படி குற்ற அறிக்கையை இந்நீதிமன்றம் நன்கு பரிசீலித்து, இவ்வழக்கின் எதிரி மீது சட்டப்பிரிவு 4–A Tamil Nadu Prohibition Act –ன் கீழ் புலன் கொள்ளக்கூடிய முகாந்திரம் இருந்ததால், இவ்வழக்கு கோப்புக்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் பிரிவு 230 B.N.S.S–ன் கீழ் இவ்வழக்கின் ஆவணங்களின் நகல்கள் இலவசமாக வழங்கி எதிரியிடம் குற்றம் பற்றி விளக்கி கூறி வினவிய போது, எதிரி குற்றத்தை மறுத்து வழக்கு விசாரிக்கப்படவேண்டும் என்று கேட்டுக் கொண்டார். எனவே, அரசுத்தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**3.** அரசுத்தரப்பில், இவ்வழக்கில், பட்டியல் சாட்சி 1–ஐ விசாரிக்க வேண்டியதில்லை என்று கற்றறிந்த அரசு உதவி வழக்கறிஞர்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:40:45 +0530

அவர்கள் மேற்குறிப்பு செய்துள்ளார்.

4. அரசுத்தரப்பில், சாட்சியாக அ.சா.1 மற்றும் அ.சா.2 விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.01 முதல் அ.சா.ஆ.05 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

5. அரசுத்தரப்பு சாட்சியங்கள் விசாரித்து முடித்த பின்பு, அதனை படித்து காண்பித்து பிரிவு 351(1)(b) B.N.S.S—ன் படி கேள்விகள் கேட்டபோது, எதிரி அதனை பொய்சாட்சியம் என்றும், பொய்வழக்கு என்றும், தன் தரப்பில் விசாரிக்க சாட்சி இல்லை என்றும் கூறினார்.

6. எதிரிதரப்பில் சாட்சிகளோ, சான்றாவணங்களோ, விசாரணை செய்து குறியீடு செய்யப்படவில்லை.

7. அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்ட அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.5 வரையிலான சான்றாவணங்கள் ஆகியவை மூலமாக அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டு உள்ளதாகவும், எனவே, எதிரிக்கு தக்க தண்டனை வழங்கவேண்டும் என்று அரசுத்தரப்பில் வாதிடப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:40:50 +0530

Chart for Witnesses Examined:

| Prosecution Witness No. | Name of Witness | Description |
|---|---|---|
| அ.சா.1 | திரு. ஜெய்சங்கர் – தலைமை காவலர் | கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரில் சாட்சி கையொப்பம் செய்தவர். இவ்வழக்கு விபரத்தைப்பற்றி கூறும் சாட்சி. |
| அ.சா.2 | திரு. விஜயராகவன் – காவல் உதவி ஆய்வாளர் | இவ்வழக்கின் புலன் விசாரணை செய்து குற்ற அறிக்கை தாக்கல் செய்த விபரத்தைப் பற்றி கூறும் சாட்சி |

Chart for Exhibited Documents:

| Exhibit No. | Description of the Exhibit | Proved by / Attested by |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | கைப்பற்றுதல் மகஜரில் அ.சா.1–ன் இரண்டாவது கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | அழித்தல் மகஜரில் அ.சா.1–ன் இரண்டாவது கையொப்பம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கை. | அ.சா.2 |
| அ.சா.ஆ.4 | கைப்பற்றுதல் மகஜர் | அ.சா.2 |
| அ.சா.ஆ.5 | அழித்தல் மகஜர் | அ.சா.2 |

**8. கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில், சம்பவசமயத்தில், சம்பவயிடத்தில் வைத்து, எதிரி பொதுமக்களுக்கு இடையூறாக மது அருந்தி கொண்டிருந்தார்**



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:40:56 +0530

**என்பதையும் எதிரிதான், இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதையும் அரசுத்தரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காத காரணத்தினாலும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.**

9. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுத்தரப்பில் எதிரி மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு 4–A Tamil Nadu Prohibition Act–ன் கீழான குற்றத்தை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>அரசுத்தரப்பு சாட்சி, தனது முதல் விசாரணையின் போது, கீழ்கண்டவாறு சாட்சியம் அளித்துள்ளார்:</u>**

**10.(a). அ.சா.1. திரு. ஜெய்சங்கர் , தலைமை காவலர்** தனது முதல் விசாரணையில், "1) நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.05.2026–ஆம் தேதி, 15.30 மணிக்கு மகுடஞ்சாவடி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரும், நானும், தலைமை காவலர் திரு. ராஜீ என்பவரும் மது விலக்கு மற்றும் குற்றதடுப்பு அலுவல் சம்மந்தமாக மகுடஞ்சாவடி காவல் நிலைய சரகம், கனககிரி கிராமம், பிரண்ட்ஸ் தாபா அருகே கண்காணித்துக் கொண்டு சென்றபோது அங்குள்ள பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறாக மது அருந்தி



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:02 +0530

கொண்டிருந்த பின்னால் பெயர் விலாசம்கேட்டு தெரிந்த சுரேஸ் த/பெ. சேகர், நொருக்கம்பாளையம், காளிகவுண்டம்பாளையம் கிராமம், சங்ககிரி தாலுக்கா, சேலம் மாவட்டம் என்பவர் எங்களை கண்டதும், ஓட எத்தணித்தவரை போலீஸ் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து அந்த இடத்தில் பார்த்தபோது சுமார் 180 மி.லி. அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டிலில் சுமார் 90 மி.லி. அளவுடன் கூடிய பிராந்தி மற்றும் பிளாஸ்டிக் டம்ளர் ஒன்று பிராந்தியுடன் இருந்தது.

2) விசாரித்தபோது மேற்படி எதிரியானவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைதுக்கான காரணத்தை தெரிவித்து காவல் உதவி ஆய்வாளர் 15.45 மணிக்கு கைது செய்தும், மேற்படி தடயங்களை கைப்பற்ற அந்நேரத்தில் அவ்விடத்தில் இருந்த பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் அலுவலுக்கு வந்திருந்த என்னையும் தலைமை காவலர் திரு. ராஜீ என்பவரையும் சாட்சிகளாக வைத்து 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி மேற்படி தடயத்தை உத்தரவுபடி அதே இடத்தில் யாருக்கும் பயன்படாத வண்ணம் கீழே கொட்டி அழித்தல் மகஜர் தயார் செய்தும் எங்கள் முன்னிலையில் தயார் செய்த கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகஜரில் நானும் தலைமை காவலர் திரு. ராஜீ என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம். **(கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜரில் உள்ள இரண்டாவது கையொப்பம் அ.சா.ஆ.1**



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:08 +0530

**மற்றும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3) பின்னர் 18.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 152/2026 u/s 4-A TNP Act ஆக வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். இது சம்மந்தமாக என்னை விசாரித்தார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**10.(b). அ.சா.2. திரு.விஜயராகவன், காவல் உதவி ஆய்வாளர்** தனது முதல் விசாரணையில் "1) நான் மகுடஞ்சாவடி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.05.2026-ஆம் தேதி, 15.30 மணிக்கு மகுடஞ்சாவடி காவல் நிலைய காவல் உதவி ஆய்வாளரும் ஆகிய நானும், தலைமை காவலர்கள் திரு. ராஜீ மற்றும் திரு.ஜெய்சங்கர் என்பவரும் மது விலக்கு மற்றும் குற்றதடுப்பு அலுவல் சம்மந்தமாக மகுடஞ்சாவடி காவல் நிலைய சரகம், கனககிரி கிராமம், பிரண்ட்ஸ் தாபா அருகே கண்காணித்துக் கொண்டு சென்றபோது அங்குள்ள பொது இடத்தில் பொதுமக்களுக்கு இடையூறாக மது அருந்தி கொண்டிருந்த பின்னால் பெயர் விலாசம்கேட்டு தெரிந்த சுரேஸ் த/பெ. சேகர், நொருக்கம்பாளையம், காளிகவுண்டம்பாளையம் கிராமம், சங்ககிரி தாலுக்கா, சேலம் மாவட்டம் என்பவர் எங்களை கண்டதும், ஓட எத்தணித்தவரை போலீஸ் பார்ட்டி சகிதம் சுற்றி வளைத்து பிடித்து அந்த இடத்தில் பார்த்தபோது சுமார் 180 மி.லி. அளவு கொண்ட Black



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:13 +0530

Pearl பிராந்தி பாட்டிலில் சுமார் 90 மி.லி. அளவுடன் கூடிய பிராந்தி மற்றும் பிளாஸ்டிக் டம்ளர் ஒன்று பிராந்தியுடன் இருந்தது.

2) விசாரித்தபோது மேற்படி எதிரியானவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டவரை கைதுக்கான காரணத்தை தெரிவித்து காவல் உதவி ஆய்வாளர் 15.45 மணிக்கு கைது செய்தும், மேற்படி தடயங்களை கைப்பற்ற அந்நேரத்தில் அவ்விடத்தில் இருந்த பொது ஜன சாட்சிகள் யாரும் முன்வராததால் அலுவலுக்கு வந்திருந்த தலைமை காவலர்கள் திரு. ராஜீ மற்றும் திரு.ஜெய்சங்கர் என்பவரையும் சாட்சிகளாக வைத்து 16.00 மணிக்கு கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றி மேற்படி தடயத்தை உத்தரவுபடி அதே இடத்தில் யாருக்கும் பயன்படாத வண்ணம் கீழே கொட்டி அழித்தல் மகஜர் தயார் செய்தும் தலைமை காவலர்கள் திரு. ராஜீ மற்றும் திரு.ஜெய்சங்கர் முன்னிலையில் தயார் செய்த கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகஜரில் தலைமை காவலர்கள் திரு. ராஜீ மற்றும் திரு.ஜெய்சங்கர் என்பவரும் சாட்சிகளாக கையொப்பம் செய்தார்கள்.

3) பின்னர் 18.00 மணிக்கு எதிரியுடன் நிலையம் வந்து எதிரி மீது நிலைய குற்ற எண். 152/2026 u/s 4–A TNP Act ஆக வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வாக்குமூலங்கள் பதிவு செய்து மேற்படி ஆவணங்களை மாண்புமிகு நீதிமன்றத்திற்கு



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:18 +0530

அனுப்பியும், வழக்கின் புலன் விசாரணையை முடித்து 18.05.2026 தேதியில் குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்தேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**11. கற்றறிந்த எதிரிதரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில், சம்பவசமயத்தில், சம்பவயிடத்தில் வைத்து, எதிரி பொதுமக்களுக்கு இடையூறாக மது அருந்தி கொண்டிருந்தார் என்பதையும் எதிரிதான், இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டார் என்பதையும் அரசுத்தரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்காத காரணத்தினாலும், சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவரை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்ய வேண்டும் என்று வாதிட்டார்.**

<u>மேற்படி எதிரியின் தரப்பு வாதத்தை இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு ஆய்வு செய்து, தீர்மானிக்கிறது:</u>

**<u>விவாதம், தீர்வு மற்றும் தீர்வுக்கான காரணம்:</u>**

**11.(a).** இவ்வழக்கில், அ.சா.1 திரு. ஜெய்சங்கர், தலைமை காவலர் மற்றும் அ.சா.2 திரு.விஜயராகவன், காவல் உதவி ஆய்வாளர், ஆகிய அரசுதரப்பு சாட்சிகள், தங்களது முதல் விசாரணையில், சம்பவ சமயத்தில் சம்பவ இடத்தில் எதிரி பொது மக்களுக்கு இடையூறாக மது அருந்திக்கொண்டிருந்தார் என்றும் சுமார் 180 மி.லி. அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டிலில் சுமார் 90 ML அளவுடன்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:24 +0530

கூடிய பிராந்தி மற்றும் பிளாஸ்டிக் டம்ளர் ஒன்று பிராந்தியுடன் ஆகியவை சம்பவயிடத்தில் வைத்து, கைப்பற்றுதல் மகஜரின் வாயிலாக அ.சா.2– திரு.விஜயராகவன், காவல் உதவி ஆய்வாளர் அவர்கள் கைப்பற்றியதாகவும், அதில் பட்டியல் சாட்சி–1 தலைமை காவலர் திரு. ராஜு மற்றும் அ.சா.1 நிலைய தலைமை காவலர் திரு.ஜெய்சங்கர் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும், பின்னர் மேற்சொன்ன கைப்பற்றப்பட்ட பொருட்களை அழித்தல் மகஜரின் வாயிலாக அழித்தாகவும், அதுசமயம் பட்டியல் சாட்சி–1 தலைமை காவலர் திரு. ராஜு மற்றும் அ.சா.1 நிலைய தலைமை காவலர் திரு.ஜெய்சங்கர் மேற்சொன்ன அழித்தல் மகஜரில் சாட்சிகளாக கையொப்பம் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார். அ.சா.2–ன் சாட்சியம், அ.சா.1–ன் சாட்சியத்துடன் பொருந்துகிறது (Corroborated).

**11.(b).** அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய அரசுத்தரப்பு சாட்சிகள், எதிரியிடமிருந்து வழக்குச்சொத்துக்களை சம்பவயிடத்தில் வைத்து கைப்பற்றிய விபரத்தையும், அதை, அழித்தல் மகஜரின் வாயிலாக அழிக்கப்பட்ட விபரத்தையும் நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

**11.(c).** அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சியத்தில் நம்பகத்தன்மை உள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. அ.சா.1 சம்பவயிடத்தில் வைத்து, கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அழித்தல் மகஜர் தயார்



SIVAKUMAR D
Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:30 +0530

செய்யப்பட்ட விபரத்தை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளித்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இவ்வழக்கில், சம்பவ சமயத்தில், சம்பவயிடத்தில் வைத்து, எதிரியிடமிருந்து வழக்கு சொத்துக்களை கைப்பற்றிய விபரத்தை அரசுத்தரப்பு சாட்சிகள் நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேலும், அ.சா.1–ன் வாயிலாக, அ.சா.ஆ.4–கைப்பற்றுதல் மகஜர் மற்றும் அ.சா.ஆ.5–அழித்தல் மகஜர் நிரூபிக்கப்பட்டதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**12.(a).** தமிழ்நாடு மது விலக்கு சட்டம், சட்டப்பிரிவு 4, உட்பிரிவு (2)–ன் படி குற்றம்சாட்டப்பட்டுள்ள நபர் மது, போதை மருந்து, அல்லது கொள்கலன், கள் இறக்குவதற்கான அல்லது மது தயாரிப்பதற்கான சாதனம் அல்லது கருவி அல்லது வழக்கமாக கள் இறக்குவதற்கு அல்லது மது அல்லது போதை மருந்து தயாரிப்பதற்கு சாதாரணமாக பயன்படுத்தப்படும், அத்தகைய சாதனம் அல்லது மது அல்லது போதை மருந்து தயாரிப்பதற்கான செய்முறைக்கு ஆளான பொருட்கள் அல்லது மது அல்லது போதை மருந்து தயாரிப்புக்குரிய பொருட்கள் ஆகியவை தம்மிடம் எப்படி வந்தன என்ற விளக்கத்தை மனநிறைவளிக்கும் வகையில் அளிக்காவிட்டால், அத்தகைய குற்றத்தை அவர் புரிந்தார் என்று துணிபுகொள்ளலாம் (Presumption) என்று மேற்படி சட்டப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது.



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:35 +0530

**12.(b).** இவ்வழக்கில், எதிரியிடமிருந்து, கைப்பற்றப்பட்ட இவ்வழக்குச் சொத்து எவ்வாறு தம்மிடம் வந்தது என்ற விளக்கத்தை மேற்படி எதிரி தனது தரப்பு சாட்சிகளின் வாயிலாகவோ, அல்லது தனது தரப்பு குறுக்கு விசாரணையின் மூலமாகவோ இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்தாத நிலையிலும், சம்பவசமயத்தில், எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது எதிரி மதுபானத்தை குடித்து பொது மக்களுக்கு இடையூறு செய்யவில்லை என்றும், தன்னிடம் கைப்பற்றப்பட்ட பொருள் மது அல்ல என்று கேள்வி எழுப்பாத நிலையிலும், இவ்வழக்கில், சம்பவ சமயத்தில், எதிரி, இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்ற விபரம் இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது. எனவே, இவ்வழக்கின் எதிரி, பொது இடத்தில் மது அருந்தி பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்திய விவரத்தை அரசுதரப்பு சாட்சிகள் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**13.** எனவே, இவ்வழக்கில், சம்பவசமயத்தில் எதிரியிடமிருந்து சுமார் 180 மி.லி. அளவு கொண்ட Black Pearl பிராந்தி பாட்டிலில் சுமார் 90 மி.லி. அளவுடன் கூடிய பிராந்தி மற்றும் பிளாஸ்டிக் டம்ளர் ஒன்று பிராந்தி ஆகியவை கைப்பற்றப்பட்டது என்ற விபரத்தையும், மேலும், எதிரிதான், இவ்வழக்கு குற்ற சம்பவத்தில் ஈடுபட்டுள்ளார் என்ற விபரத்தையும், அரசுத்தரப்பு சந்தேகத்திற்கிடமின்றி நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவுசெய்கிறது.



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:41 +0530

**14.** முடிவாக, மேலே ஆராய்ந்த வகையில், இந்நீதிமன்றம், எதிரியை சட்டப்பிரிவு 4-A Tamil Nadu Prohibition Act-ன் கீழ் குற்றவாளி என தீர்மானிக்கிறது.

**15.** மேற்படி குற்றத்தின் தன்மையை கருத்தில் கொண்டு, இவ்வழக்கின் எதிரி சட்டப்பிரிவு 4-A Tamil Nadu Prohibition Act-ன் கீழ் குற்றம் புரிந்துள்ள காரணத்தினாலும், மேலும், எதிரியின் மீதான மேற்படி குற்றமானது அரசுத்தரப்பால் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ள காரணத்தினாலும், இவ்வழக்கின் எதிரியை சட்டப்பிரிவு 401 B.N.S.S-ன் கீழ் நன்னடத்தையின் அடிப்படையில் (Probation of Offenders Act) விடுவிக்கலாகாது என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

**16.** முடிவாக, மேலே ஆராய்ந்த காரணங்களின் அடிப்படையில் தீர்மானித்தபடி, இவ்வழக்கின் எதிரியின் மீது சுமத்தப்பட்ட சட்டப்பிரிவு 4-A Tamil Nadu Prohibition Act-ன் கீழான குற்றத்தை அரசுதரப்பு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபித்துள்ள காரணத்தினால், மேற்படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றமான சட்டப்பிரிவு 4-A Tamil Nadu Prohibition Act-ன் கீழ் அவர் குற்றவாளி என்று முடிவு செய்து, மேற்சொன்ன குற்றத்திற்கு, எதிரிக்கு ரூபாய் 700/- (ரூபாய் எழுநூறு மட்டும்) அபராதமாக விதித்தும், மேற்படி அபராதத்தை கட்டத்தவறினால், அவருக்கு ஒரு மாத காலம் மெய்க்காவல்



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:48 +0530

சிறைதண்டனை விதித்தும் பிரிவு 278(2) B.N.S.S–ன் கீழ் இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

**17.** இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**18.** இந்த வழக்கு விசாரணை நிலுவையில் இருந்தபோது எதிரி பிணையில் இருந்துள்ளார். வழக்கின் மேல் முறையீட்டு காலத்திற்கு பின் குற்றம் சாட்டப்பட்ட நபர் எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்தாக உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து–தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 2026–ம் ஆண்டு ஜூலை திங்கள் 15–ஆம் நாள் புதன்கிழமை இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:41:54 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

**பின் இணைப்பு:**

**அரசு தரப்பு சாட்சிகள்:**

| அரசுதரப்பு சாட்சிகளின் வரிசை எண் | அரசுதரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | திரு. ஜெய்சங்கர், தலைமை காவலர் |

| | |
|---|---|
| அ.சா.2 | திரு.விஜயராகவன், காவல் உதவி ஆய்வாளர் |

<u>அரசுதரப்பு சான்றாவணங்கள்</u>:

| அரசுதரப்பு சான்றாவணங்களின் வரிசை எண் | தேதி | அரசுதரப்பு சான்றாவணங்கள் |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 18.05.2026 | கைப்பற்றுதல் மகஜரில் அ.சா.1–ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 18.05.2026 | அழித்தல் மகஜரில் அ.சா.1–ன் இரண்டாவது கையொப்பம் |
| அ.சா.ஆ.3 | 18.05.2026 | முதல் தகவல் அறிக்கை. |
| அ.சா.ஆ.4 | 18.05.2026 | கைப்பற்றுதல் மகஜர் |
| அ.சா.ஆ.5 | 18.05.2026 | அழித்தல் மகஜர் |

**<u>அரசுத்தரப்பு சான்றுப்பொருள்கள்</u>: –இல்லை–**

**<u>எதிரிதரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்</u> : –இல்லை–**

**<u>பிற்சேர்க்கை:</u>**

1) வழக்கு விசாரணை காலத்தில் எதிரி பிணையில் இருந்தார்.

2) வழக்கு விசாரணை காலத்தில் எந்த ஒரு சாட்சியும் மூன்று நாட்களுக்கு மேல் விசாரணையின்றி நிறுத்தி வைக்கப்படவில்லை.



SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:42:03 +0530

3) வழக்கின் முடிவு அரசுதரப்புக்கு தெரிவிக்கப்பட்டது.

4) வழக்குச்சொத்து ஏதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5) முடிவில், எதிரிக்கு சட்டப்பிரிவு 278(2) B.N.S.S.–ன் படி தண்டனை வழங்கி இந்நீதிமன்றத்தால் தீர்ப்பளிக்கப்பட்டது.

SIVAKUMAR D

Digitally signed by SIVAKUMAR D
Date: 2026.07.15 16:42:12 +0530

**நீதித்துறை நடுவர் எண்.2,**
**சங்ககிரி.**

Judgment uploaded online on 15.07.2026.